அக் -1916

ஆர்யதர்மம்.

புத். 3.
ஸஞ். 6.

பிங்கள௵ ஆசுவின சுத்தபஞ்சமி.

கல்வி.

கடல் சூழ்ந்த இப்பூவுலகின் கண்ணே அழியாத செல்வமென்று கருதக் கூறியது கல்வியே யாகும். அது இதர செல்வங்களைப்போல் ஜலத்தாலும் அக்கினியாலும் அழியாது. பிறரால் கவரவும் முடியாது. நாமாகவே கொடுத்தாலும் குறையாது. அதற்கு மாறாகப் பெருக்கவே செய்யும். இவ்வளவு அருமைவாய்ந்த கல்விச் செல்வத்தைக் காப்பதிற் சிரமம் உண்டோ வெனில் அதுவுமில்லை. இதனை ஆன்றோர்

அமைத்த அடியில் வரும் பாசுரம் இனிது விளக்கும். அது வருமாறு :—

வெள்ளத்தாற் போகாது வெந்தணலால்வேகாது [வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறை-[வொழியக் குறைபடாது
கள்ளர்க்கோ மிகவரிது காவற்கோ மிகவெளிது-[கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்க உலகெலாம் பொருள்-[தேடியுழல்கின்றாரே.

இத்தகைய பெரும் பெருமை வாய்ந்த கல்விச் செல்வத்தையே முதலாவது "இளமையிற் கல்" என்றபடி அவசியமாகததேடி அடைய வேண்டும். அதுவே மக்களுக்கு அழகும் உற்ற துணையுமாம்.

அதுபற்றியே மாநிலம் புரக்கும் மகாமன்னவரால், கல்விக்கரசியாகிய சரஸ்வதி கடாக்ஷம் பெற்ற கற்றவனை சிறப்புடையனென்று கூறப்பட்டதும அம்மன்னவரும் அவனை விரும்புவாரென்றதுமாம.

இப்படிப்பட்ட கல்வியைப் பெறாதவனுக்குச் சரீரத்தில் முக்கியமாயுள்ள கண்கள் இருந்தும் அவைகள் புண்களாகவே மதிக்கத் தகும். (கண்ணுடையரென்பர் கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்.) என்று ஆன்றோர் கூறியுள்ளார்.

எண்ணென்ப வேனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு.

கல்வியே யாவர்க்கு மொளிகொண்ட வடிவமாங்
கல்வியே புதையலாகுங
கல்வியே பரதேச கமனவின மாகுமக்

கல்வியே துணையதாகுங்
கல்வியே திசைகொண்ட கனகீர்த்தியைத்தருங்
கல்வியே பெருமையாக்குங்
கல்வியே வேண்டுநற் போகங்களைத்தருங்
கல்வியே யின்பமாக்குங்
கல்வியே நிலைகொண்ட கற்பகத் தருவதாங்
கல்வியே செல்வமாகுங்
கல்வியே யரசரால் பூசைசெய் விக்குமக்
கல்வியே கடவுளாகும்
கல்விக்கு நிகரான பொருளொன்று மிம்மையிற்
கருதிடினு மில்லையில்லை
கல்லா னகத்தொன்று மில்லா னடக்குமிரு
காற்பசுவ தென்பர்மாதோ.

கல்லாத மூடரைக் காணவு மாகாது
கல்லாத மூடர் சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராம்
கல்லாத மூடர் கருத்தறியாறே.

இவ்விதம், கல்வியே சகல சிறப்பினையுமீவதும் அஃதில்லாமையே சகல இழிவினையும் தருவது மாதலால் நாம் கல்வியை அவசியம் தேடி அடையவேண்டும். இன்னும் கல்விச்சிறப்பைப்பற்றி பணமுடிய (ஆதிசேடன்)னாலும் பகரமுடியாதெனில் அற்ப மதியுடைய யானோ பகர வல்லேன். ஆயினும் கூடுமானவரை எழுதுவதாயினும் அதுவே ஒரு புஸ்தகமாகுமாதலால், விரிவஞ்சி விடுத்தனன்.

அதிலும் லௌகிகக் கல்வியை விடப் பெறுதற்கரிய பேரின்பமாகிய, முக்தியின்பத்தை அளிக்கவல்ல ஆத்மார்த்த விஷயமான கல்வியே மேலானது.

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாரெனின்.

என்றபடி கடவுளைத் தொழுது நற்கதி யடைதலே கற்றதின் பயனுமாம். ஆதலின் "கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக" என்றபடி கற்கத் தகுந்த இம்மாதிரி நூல்களைக் கசடறக் கற்று அதின் பின் அதின் வழி நடக்கவேண்டியது நம் கடமை. சொற்ப நாளில் அழியும் அற்பமான தேக சவரக்ஷணைக்காகமட்டிலும் அல்லும் பகலும் உழைக்கும் இக்காலத்தில் கரையில வான வேதபுராணாதி நூல்களனைத்தும் சின்னாள் வாழ்க்கையுள்ள நாம் ஆராய்ந்து பயனடைவதோ அரிது அரிது. அக்குறையை நிவர்த்தித்து அதின் சாராம்சத்தை எளிதில் எடுத்துப்புகட்டி மனுமக்களை நல்வழிப்படுத்தக் கருதி ஆங்காங்குள்ள அறிஞர்கள் சங்கங்களும் பத்திரிகைகளும் ஏற்படுத்தி நடைபெறச்செய்து வருகின்றனர். இது அரியதோர் பேருபகாரமே யாகும். அதிலும் வர்ணாசிரம-மதவிஷயமான கல்வியை ஊட்டுவித்து இம்மை மறுமைப் பயனளிக்கும் இம்மாதிரிப் பத்திரிகைகள் மிகச்சிலவே.

தவிரவும் இப்பத்திரிகையை அனைவரும் எளிதில் பார்த்து அதின் பயனை அடைய வேண்டுமென்ற லோகோபகாரமான எண்ணத்துடன் அதின் சந்தாவை நாளது வருஷம் குறைத்திருப்பதும் புகழற்பாலதே யாகும்.

ஆதலின் நண்பர்கள் இதைக் கவனித்து இப்பத்திரிகை நீடூழிநிலைத்தோங்கி வளர்ந்து வருமாறு இதற்குச் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து இதனை ஆதரிக்க ஜகதீசன் திருவருள் பாலித்தருளும்படி நாமனைவரும் அவருக்கு அன்புடன் ஆராதனம் செய்து வருவோமாக.

A. M. காசிநாத பிள்ளை.

“ ஈசுவரன் ”

(முன்தொடர்ச்சி.)

கர்மமென்பது இதே ஜன்மத்தில் அநுபவிக்கக்கூடிய திருஷ்டமான பயனையுடையதென்றும் மறுமையிலனுபவிக்கக் கூடிய அதிருஷ்டமான பயனையுடையதென்றும் இருவகைத்தாகும். அதினிலும் திருஷ்டமான பயனையுடைய கர்மமும் உடனே அனுபவிக்கக் கூடிய பயனையுடையதென்றும், காலாந்தரத்தில் அநுபவிக்கக் கூடிய பயனையுடையதென்றுமிருவகைத்தாகும். உடனே அனுபவிக்கக் கூடிய பயனையுடையது புசிப்பது, நடப்பது, பிளப்பது முதலியவை யாகும். இவையெல்லாம் பயனுண்டாகும் வரை தொடர்ந்து நிற்கும். பயனுண்டான பிறகுதான் நசிக்கும். அன்றியுமிவைகளிற் சில அதாவது புசிப்பது, நடப்பது முதலியன அதன் பயனாகிய திருப்தி, கிராமப் பிராப்தி முதலிய பயனையடைவதற்காகத் தானே செய்ய வேண்டியதாகும். சில, பிளப்பது முதலியவை, அதன் பயனாகிய மரம் முதலியவை துண்டிக்கப்படுதல் முதலியவைகளை விரும்பியவனால் தானே செய்யத்தக்கதாயுமாகும், அல்லது பிறனைக் கொண்டு செய்விக்கத்தக்கதாயும் ஆகும். அதில் தானாகவே செய்யும்பொழுது அந்தப்பயனே தனக்குக் கிடைக்கின்றது. பிறனைக்கொண்டு செய்விக்கும்பொழுது செய்விப்பவனுக்கு, அதே பயன் தான். செய்விப்பவனால் ஏவப்பட்டு செய்கிறவனுக்கு மரம் முதலியவை துண்டிக்கப்படுதலே பயனில்லை. ஆனால் செய்விப்பவனுடைய தயையோ அல்லது அவனிடமிருந்து கிடைக்கும் சம்ப

ளம் முதலியவைகளோ பயனாகின்றது. அந்த சம்பளம் முதலிய பயன் அந்தப் பிரபுவின் தயையை முன்னிட்டு வேலைசெய்து முடித்த க்ஷணத்திலேயாவது காலாந்தரத்தி லாவது கிடைக்கின்றது. கர்மமே பயனைத் தருமாயின் சம்பளம் முதலியவைகளை விரும்பிய வேலைக்காரன் பிரபுவினிடம் போகவே வேண்டாமென்றும், அவனது தயவை யெதிர் பார்க்க வேண்டாமென்றும் ஏற்படும். சூரியோதயம் முதல் சூரியாஸ்தமய பரியந்தம் கொல்லைகளைக் கொத்துவதும், கட்டைகளை வெட்டுவதுமே பயனைத் தந்துவிடு மென்றுமேற்படும். ஒரு வேலைக்காரனும் தொழிலில்லாமல் திண்டாடமாட்டானென்றுமேற்படும். அப்படியே ஏற்பட்டு விடட்டுமே யென்று கூறுவது சரியல்ல. தொழில் கிடைக்காமல் திண்டாடும் பலரைப் பார்க்கின்றோம். தொழில் கிடைத்தும் சம்பளம் முதலியவை கிடைக்காமல் பிரபுக்களின் தயை பெறவேண்டி பிரயத்தினம் செய்யும் பலரையும் பார்க்கின்றோம். ஆகையால் திருஷ்டமான கர்மத்தின் பயனும் அந்த வேலையின் தாரதம்மியத்தை அடைந்த பிரபுவினிடமிருந்தே அடைய வேண்டியதாகிறது. இதனால் எந்த க்ஷணத்தில் வேலை முடிகின்றதோ அதே க்ஷணத்தில் பயனுண்டாகுமிடத்து வேறு பயனைத் தருபவனை எதிர் பார்க்க வேண்டாம். வேலை முடிகிறது ஒரு சமயமும் பயனை யடைவது மற்றொரு சமயமுமாகவிருக்குமிடத்து காலாந்தரத்தில் வரும் பயனைத் தரவேண்டி, வேறாக, பயனைத் தருபவனை அபேக்ஷிக்க வேண்டியதாகிறதென்று ஏற்பட்டது. உடனே பயனைத் தரும் திருஷ்ட கர்மாவிலேயே இங்ஙனமாயின் காலாந்தரத்தில் பயனைத் தரும் திருஷ்ட கர்மாவிலும் அதிருஷ்டமான பயனையுடைய கர்மங்களிலும் பலதாதாவை அபேக்ஷிக்க வேண்டுமென்பதற்குக் கேட்பானேன். அதனால்

யாகம் முதலிய கர்மங்கள் முடிந்த க்ஷணத்திலேயே அதன் பயன் கிடைக்கப்படாத படியால் அந்த கர்மங்களின் பயனைப் பெறவேண்டி அவைகளின் தாரதம்மியத்தையும் கர்த்தாவினுடைய தேச காலாதிகளையும் நன்கறிந்த ஸர்வக்ஞனை பரமேசுவரனுடைய பிரஸாதத்தையே எதிர் பார்க்க வேண்டியதாகிறது. ஈசுவரன் ஒருவர் இருக்கிறாரென்பதற்கு இதுவே ஒரு அனுமானமாகிறது. அதாவது யாகாதிகளான கர்மங்களின் பயன் ஸர்வக்ஞனான ஈசுவரனால் அடைவிக்கப்பட்டதாக இருக்கவேண்டும்; காலாந்தரத்தில் வரக்கூடிய பயனானதால்; எதெது காலாந்தரத்தில் வரக் கூடிய பயனோ அதெல்லாம் அறிஞனான பிரபுவால் அடைவிக்கத்தக்கதாயிருக்கவேண்டும்; ஸேவகனுடைய ஸேவையின் பயன்போல்; யாகாதிகளின் பயனாகிய ஸ்வர்க்கம் முதலியவை காலாந்தரத்தில் சம்பவிக்கக் கூடிய பயனானதால் ஸர்வக்ஞனான பரமேசுவரனாலேயே அடைவிக்கத்தக்கதாயிருக்கவேண்டும். இதனால் ஈசுவரன் ஒருவர் இருக்கிறார் என்பது திடப்படுகிறது. காலாந்தரத்தில் வரக்கூடிய பயனையுடைய கிருஷி (உழுது பயிரிடுதல்) முதலிய திருஷ்ட கர்மங்களின் பயனாகிய தானிய ப்ராப்தி முதலியவைகள், விதை, பூமி, இவைகளின் ஸமஸ்காரம் (சீர்திருத்தம்), இவைகளின் இரக்ஷை ஆகிய சாதனங்களை நன்கறிந்த வேலைக்காரனை யபேக்ஷித்தே ஏற்படுகின்றது. இதுபோலவே யாகாதிகளான கர்மங்களின் பயனும் ஸர்வக்ஞனான பரமேசுவரனை யபேக்ஷித்தே அடையவேண்டியதாகின்றது. அரசன்போல் ஸர்வக்ஞனான பரமேசுவரன்தான் பயனைத் தருபவன் என அங்கீகரிக்கும் பக்ஷத்தில் அரசன் போலவே ஈசனும் நிக்கிரஹம் அனுக்கிரஹம் இவைகளைச் செய்கின்றபடியால் ராகம், த்வேஷம், முதலிய கெட்ட குணமுள்ளவராக

ஆய்விடுவாரேயெனச் சங்கை செய்வது சரியல்ல. நிக்கிரஹாநுக்கிரஹங்களைச் செய்ததனால் மாத்திரம் ராகத்துவேஷாதி தோஷமுள்ளவராய் விடமாட்டார். அவரவர்களுடைய காரியங்களுக்குத் தக்கவாறு நிக்கிரஹாநுக்கிரஹங்களைச் செய்பவர், நற்குணமுடையோரெனப் புகழப்படுவாரேயன்றி எக்காலுமிகழப்படமாட்டாரென்பது உலகபிரசித்தம். உதாரணமாக அரசனையே பார்ப்போம். அரசன் தன் ராஜ்ஜியத்திலுள்ள துஷ்டர்களை சிக்ஷித்தும் சிஷ்டர்களை இரக்ஷித்தும் வருவானாயின் அவரவர்களின தொழிலுக்குத் தக்கபயனைத் தருகிறான. நல்ல குணமுள்ளவன் எனப் புகழப்படுகிறானேயன்றி நிந்திக்கப்படுகிறானில்லை. அவரவர்களின் தொழிலைக் கவனிக்காமல் தனனிஷ்டம்போல் நடத்துவானாயின் அப்பொழுதுதான் நிந்திக்கப்படுவான். அதுபோலவே ஈசுவரன் ஸ்வதந்திரமாக அவரவர்களின் கர்மங்களை கவனிக்காமல் பயனையளிப்பாராயின் இகழத்தக்க குணமுடையவராயுமாவார். அப்படி ஈசன் பயனையளிப்பதில்லை. ஆனால் பிராணிகள் செய்த நல் வினை தீவினைகளை யபேக்ஷித்து அதற்குத் தக்கபடி பயனை யளிக்குமீசனிடத்து எத்தோஷத்தையுமாரோபிக்க மூடனல்லாதவன் துணியமாட்டான். பிராணிகளின் கர்மங்களை யபேக்ஷித்துப் பயனைத் தருமீசனுக்குச் சுதந்திரத்தன்மை வாய்க்கமாட்டாதேயெனச் சங்கை கூடாது. வேலைக் காரனுடைய வேலையை யபேக்ஷித்து அதற்குத் தக்கபடி சம்பளம் தரும் பிரபு சுதந்திரத் தன்மையில்லாதவனாகின்றானோ? ஆகிறதில்லை. அதுபோலவே ஈசனுக்கு சுதந்திரத் தன்மை பொருந்துமாமென்க. இதைத்தான் சூத்திரகாரரும்

"वैषम्यनैर्घृण्ये न सापेक्षत्वात्तथा हि दर्शयति"

என்ற அதிகரணத்தில் ஸ்பஷ்டமாய் கூறியுள்ளார். ஒரு

வன் நன்மை பெறவும் மற்றொருவன் தீமை பெறவும் ஈசன் காரணமாகின்றாரே? அப்பொழுது தோஷமில்லாதவரென யாங்ஙனம் கூறுவது என்றால் கூறுவாம். ஒருவன் கக்ஷி ஜயிப்பதற்கும் மற்றொருவன் கக்ஷி தோற்பதற்கும் ஸாக்ஷியாயுள்ளவன் காரணமாயிருப்பவனாயினும் அவனை ராக துவேஷமுள்ளவனாகச் சொல்வதில்லை. கண்டதை மறைக்காமல் உள்ளபடி சொல்லுகிறபடியால் சாக்ஷியாயுள்ளவனை நற்குணமுள்ளவனாகவே சொல்லுகிறார்கள். ஸாக்ஷியென்பவன் வாதி பிரதிவாதிகளின் கக்ஷிகளிற் சாராமல் நடந்ததை உள்ளபடி கவனித்து உரைப்பவன். அவன்போல ஈசனும் ஒருவனுடைய கக்ஷியிலும் சாராமல் அவரவர்களின் கர்மங்களுக்கு ஸாக்ஷியாயிருந்து பயனைத் தருவதால் தோஷமுடையவராகமாட்டார். ஆகையால் அநந்த கலியாண குண பரிபூர்ணனும் ஸர்வக்ஞனுமான் ஈசுவரன் விசித்திரமான இப்பிரபஞ்சத்தைப் படைத்து அவரவர்களின் கர்மங்களுக்குத் தக்கவாறு பயனையளித்து இரக்ஷித்து நித்தியானந்த ரூபியாய் விளங்குகிறாரென்பது வேத சித்தாந்தம். தைத்திரீயோபநிடதம் ஆனந்தவல்லியிலும், பிருகதாரண்யகம் அக்ஷரபிராமணம் முதலிய விடங்களிலும் ஈசுவரனை ஸாதிக்க அநேக அனுமானங்கள் கூறப்பட்டுள்ளன. அவைகள் அதிருட்பமானபடியால் அவைகளை இங்கு கூறாமல் விடுத்தனம். அத்தகைய பரமேசுவரனை நமது அதிகாரத்துக்குத் தக்கபடி ஆராதித்து இஷ்டசித்தி பெறுவோமாக.

V. S. வேங்கடராம சாஸ்திரி.

புத்தகவரவு.

ரத்தினப்பிரகாசம்.

நமது தேசங்களில் வெகு காலமாய்த் தகுந்த பிரபுக்கள் முதல் சாமான்னிய ஜனங்கள் வரையில் அவரவர்களின் ஐசுரியத்துக்குத் தக்கவாறு ரத்தினாபரணங்களை வாங்கி விருப்பத்துடன் அணிந்து வருகிறார்கள் என்பது யாவருக்கும் வெளிப்படை. சாஸ்திரங்களிலும் உத்தமமான ரத்தினங்களை தரித்துக் கொண்டால் அதினால் சில பயன்கள் உண்டென்று கூறப்பட்டிருக்கின்றது. உலகத்தில் சிலர் தங்கட்கிருக்கும் அநுபவத்தால் ரத்தினங்களின் தாரதம்மியங்களை ஒருவாறு உணர்ந்து அங்கீகரிப்பதுண்டு. ஆனால் தோஷமில்லாத ரத்தினங்களாய் இருந்தால் மட்டும் அவை சிரேயஸ்ஸைத் தருமேயன்றி தோஷமுள்ள ரத்தினங்களால் நமக்கு நல்ல பயன் ஒன்றும் கிடைப்பதில்லை. இதன்றி அதற்கு மாறாக பலவித கஷ்டங்களும் நேருகின்றன. இவ்விதம் அறியாத் தன்மையால் தோஷமுள்ள ரத்தினங்களை நல்லதென நினைத்து வாங்கி அணிந்து அவற்றால் தங்கட்கீப் பெரிதான கஷ்டம் நேர்ந்து விட்டதென்றும் குறைந்த விலைக்கு விற்றுவிட்டோமென்றும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறோம். இவ்விதத் தீமைகளைப் போக்கிக் கொள்வதற்கு ரத்தினங்களின் பரீக்ஷையை நன்குணர்தல் அவசியம். மற்றவிதத்தால் முடியாது. ஆகையால் ரத்தினங்களை வாங்கும் வியாபாரிகளும் இதர ஜனங்களும் அவற்றின் குணதோஷங்களை நன்கறிந்து வாங்கி விசேஷமான சுகத்தை அடையவேண்டுமென்று கருதி உலக நன்மைக்காக தஞ்சாவூர் ஜயசங்கரதவே அவர்களால் இங்கிலீ

ஷிலும் தமிழிலுமாக ஒவ்வொரு ரத்தினங்களின் விஷய மாகவும் சுருக்கமாய் அதற்கான சாஸ்திரம் முதலிய ஆதா ரங்களுடன் நன்கு எழுதப்பட்டுள்ள "ரத்தினபிரகாசம்" என்னும் பொருத்தமான பெயர்பூண்ட புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு அனுப்பப்பட்டதைப் பார்த்து மிகச் சந் தோஷமடைகிறோம். ரத்தின வியபாரிகளுக்கும் ரத்தி னங்களை வாங்குவோர்க்கும் இப்புத்தகம் இன்றியமையா தது. இந்நூலைக் கண்ணுறுக்கும் ஒவ்வொருவரும் இதனை இயற்றியவருக்கு நன்றி செலுத்துவார்களென்று நினைக் கிறோம்.

இந்தியர்களுக்குக் கிழமைப் பெயர் உண்டா?

கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்னர் இந்தியாவில் 'ஞாயிறு முதல் சனிவரையிலுள்ள எழு கிழமைப் பெயர் கள் இல்லை' என்றும் அதன் பின்னர் 'க்ரீக் தேசத்தாராலே தான் இந்தியர்க்கு அப்பெயர்கள் தெரிந்தன என்றும் சின்னாட்களாகப் பல அறிவாளிகள் எழுதி வருகிறார்கள். நாமோ (ஆரியர்களென்று சொல்லிக் கொள்கிறவர்களோ) எந்தக் கர்மங்களிலும் முதலிலே சங்கற்பம் செய்து வரு கிறோம். அதிலோ கிழமையோடு கூடிய இன்னும் பல விஷயங்கள் பயின்று வருகின்றன. இவ்விஷயத்தில் அல் க்ஷியமாக இருந்தால் "பல யுகங்களாகப் பயின்று வரு கின்றது" என்று சொல்லிக் கொள்ளும் வருணாச்சிரம தர்மத்தைப் பரிகசிப்பதாக முடியும். ஆகையால் இதைக் கண்ணுறும் பெரியோர்கள் "கிழமைப் பெயர்கள் நமது புராதனங்களான வேதம், ஸ்மிருதி, புராணம், இதிகாசம் என்ற இவற்றுள் முறையே எவ்வெவற்றில் எந்தெந்த இட

த்திற் பயின்று வருகின்றன" என்பதைத் தக்க ஆதாரத்துடன் தெரிவிப்பார்களாக. இதற்குப் பாடுபடுதலும் ஆரியதர்மத்தைக் காப்பாற்றுவதுதான்.

உண்மை விரும்பிவோன்.

இந்தியர்களுக்குத்தான் கிழமைப் பெயர் உண்டு.

ஆரியர்களான அந்தணர் மணிகள் தங்களது அதிகாரத்திற் கேற்ப சுருதி ஸ்மிருதி முதலிய பிரமாணங்களால் போதிக்கப்பட்ட கர்மங்களுள் எந்த கர்மத்தைச் செய்வதாயிருந்தாலும் முதலில் ஸங்கல்பம் செய்து கொண்டுதான் அநுஷ்டிக்கின்றார்களென்பது யாவருமறிந்த விஷயம். ஸங்கல்பம் செய்துகொண்டு செய்யும் கர்மம் தான் பயனைத் தரும். அஃதின்றிச் செய்யின் பயனில்லை.

संकल्प्यैव तथा कुर्यात्स्नानदानव्रतादिकम् ।
अन्यथा पुण्यकर्माणि निष्फलाणि भवन्ति वै ॥

என்ற வசனத்தாலும், இதே கருத்தை விளக்கும் "संकल्परहितं कर्म" என்ற பரத்துவாஜ வசனத்தாலும் இப்பொருள் விளங்குகிறது.

पादौ करौ च प्रक्षाल्य समुपस्पृश्य वाग्यतः ।
प्राङ्मुखोदङ्मुखो वापि स्थित्वा दर्भासने शुचिः ।
सदर्भहस्तौ जानूर्ध्वौ दक्षिणे दक्षिणोत्तरौ ॥

कृत्वा वारादि संस्मृत्य एतत्कर्म करोति यत् ।
स्वमानसे संस्मरणं तत्संकल्प इतीरितः ॥

'கால் கைகளை யலம்பி, ஆசமனம் செய்து, மௌனமாகக்

கிழக்கு அல்லது வடக்கு முகமாக தர்ப்பாஸனத்தின் மீதுட்கார்ந்து வலதுகை மேலாகவும் இடதுகை கீழாகவு மிருக்கும்படி இருகைகளையும் சேர்ந்து வலது முழங்கால் மீது இருக்கும்படி வைத்துக்கொண்டு, தர்ப்பத்தை தரித்து, வாரம் முதலியவைகளை யுச்சரித்துக்கொண்டு, தன்னால் 'செய்யப்படுகின்ற கர்மத்தை மனதில் நினைப்பதே ஸங்கல்பமெனப்படும்' என்ற பரத்துவாஜ வசனத்தால் அந்த ஸங்கல்ப்பத்தின் சொரூபம் கூறப்பட்டிருக்கின்றது. ஆஸ்திகர்களிடத்தில் கர்மானுஷ்டானம் என்று முதற்றொடங்கினதோ! அன்று முதற்கொண்டே ஸங்கல்ப பூர்வகமாக அனுஷ்டானம் ஏற்பட்டிருக்கின்றது. ஸங்கல்ப்பமில்லாமல் ஒருக்காலும் கர்மானுஷ்டானமில்லை. கர்மானுஷ்டானமோ சிருஷ்டிகாலம் முதற்றொடங்கி வந்தமையால் ஸங்கல்பமும் அக்காலம்முகற்கொண்டே ஏற்பட்டிருக்கவேண்டும். இன்றேல் சிறிது காலம் ஸங்கல்பமின்றியே கர்மானுஷ்டானம் நடந்ததாக கூறவேண்டும். அப்படியானால் அந்த ஸங்கல்பமில்லாமலனுஷ்டிக்கப்பட்ட கர்மங்கள் பயனற்றவைகளென்று ஒப்புக் கொள்ளவேண்டியதாகும். அது சரியன்று. ஆகவே அநாதிகாலமாகத் தொடங்கி ஸங்கல்பமும் ஏற்பட்டு வருகின்றது. அந்த ஸங்கல்பத்தில் வாரம் முதலியவைகளைச் சொல்லிக் கொள்ளவேண்டுமெனக் கூறப்பட்டிருக்கின்றது. அவைகள்— வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் ஆகிய இவ்வைந்துகளாம். இவைகளை நன்கு விளக்குவதற்காகவே வேதாங்கமாக ஜோதிட சாஸ்திரம் ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய சோதிட சாஸ்திரத்தின் வாயிலாக வாரம் முதலியவைகளை நன்கு அறிந்துகொண்டு சங்கற்பத்தில் திதி வாரம் முதலியவைகளைச் சொல்லி கர்மானுஷ்டானம் செய்கின்ற ஆரியர்களது குலத்துதித்த சிறுவர்கட்கும்.

வராதிகளின் சொரூபம் உள்ளங்கை நெல்லிக்கனியாம். அந்த வாரங்களில் விதிக்கப்பட்ட விரதாதிகளையும், விலக்கப்பட்ட காரியங்களையும் தெரிந்துகொண்டு அதற்குத் தக்கபடி பிரவிருத்தி நிவிர்த்திகளை யடைகின்ற ஆரியர்கட்கன்றோ வாராதிகளின் பெருமை தெரியும். இங்ஙனம் வாராதிகளின் சொரூபத்தையும், பெருமையையும் அநாதிகாலமாக நன்கு ஆராய்ந்த ஆரியர்கட்கு, நான்காவது பொரைச் சந்திரனைப் பார்த்தவனுக்கு அபாண்டமாக அபவாதம் வருவதுபோல கலிகால கொடுமையால், வாராதிகளின் சொரூபம் தெரியாதவர்களென்று அபவாதம் நேரிட்டது மிகவும் வியசனிக்கத்தக்கதே. அம்மட்டோடல்லாமல் ஆரியர்கள் வாராதிகளின் சொரூபத்தை புறநாட்டவர்களிடமிருந்து தெரிந்து கொண்டதாகச் சிலர் ஆங்காங்கு சொல்லிக்கொள்ளும்படியும் நேரிட்டது வியக்கத்தக்கதே. இது குபேரன் ஓர் மனிதனிடம் பிச்சை யெடுத்தானென்பதற்கொப்பானது. இனி இதிலிச்சைங்கை நிகழும்—அதாவது—ஆரியர்கள் கொஞ்ச காலத்திற்குமுன் வாரத்தைத்தெரிந்து கொள்ளவில்லை—பிறகு கிரீக் தேசத்தாரிடமிருந்து கி. பி. 800 வருஷத்திற்கிப்பால் தெரிந்து கொண்டார்களென்பது உண்மையே, என்று இச்சங்கைக்கு பரிஹாரத்தை விரும்பிய ஓர் பண்டிதர் தம் விருப்பத்தை எமது ஆரியதர்மத்தின் வாயிலாக வெளிப்படுத்த உத்தேசித்திருந்ததை பரம்பரையாய்ச் செவியுற்ற யான், இச்சங்கையின் பரிஹாரத்தைச் சிறிதிங்கு கூறுகின்றேன். இச்சங்கை செய்பவரை யிது கேழ்ப்பாம்—ஆரியர்கட்கு வாரம் தெரியாதென்றால், ஸாமான்யமாக வாரந் தெரியாதா? அல்லது அதன் விசேஷம் தெரியாதா? ஸாமான்யமாக தெரியாதென்பது பொருந்தாது. வாரங்களின் விசேஷங்களனைத்தையும் ஆரியர்கள் தெரிந்து கொண்டவர்களெ

ன்று ஸாதிக்கப்போகிறபடியால் அவர்களுக்கு ஸாமான்யம் தெரியாமலிருக்காது. விசேஷங்களைத் தெரிந்து கொண்டவருக்கு ஸாமான்யம் தெரியாமலிருக்குமா? ஆனால் விசேஷங்கள் தெரியாதென்றாலும் ஆங்கு கேழ்ப்பாம். எந்த விசேஷம் தெரியாது? (1) இவ்வளவு சங்கியையுள்ளதாகத் தெரியாதென்றீரா? (2) அல்லது இன்ன வரிசையோடு கூடினதாகத் தெரியாதென்பீரா? (3) ஒருவாறு வரிசை தெரிந்தாலும் அதற்குக் காரணம் தெரியாதென்கிறீரா? (4) அல்லது வாரங்களுக்கு அதிபதிகள் தெரியாதென்கிறீரா? (5) அதிபதிகள் தெரிந்தாலும் அவர்கள் இன்ன காரணத்தினின்றுண்டானவர்களென்பதாகத் தெரியாதென்பீரா? ஒன்றும் சொல்ல முடியாது. சகல விசேஷங்களையும் வேதாங்கமாகிய சோதிட சாஸ்திரத்தின் மூலமாகவும், சுருதி, ஸ்மிருதி, பாரதம் முதலிய இதிஹாசம், ப்ராம்மம் முதலிய புராணம் இவைகளின் மூலமாகவும் ஆரியர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். சுருதி முதலிய பிரமாணங்கள் சிறிது காலத்திற்கு முன்பு தானியற்றப்பட்டன என்று கூறுவது பெரிய பிடிவாதம். இதன் விரிவை "வேதம்" என்ற பிரஸங்கத்திற் காண்க. அவற்றுள் சுருதி முதலியவற்றால் தெரிந்து கொண்டிருக்கிறார்களென்பதை பின்னிட்டோர் சமயத்தில் நிரூபிப்பாம். இப்பொழுது சோதிட சாஸ்திரத்தின் மூலமாக வாரத்தின் விசேஷங்களை ஆரியர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்களென்பதை நிரூபிக்கின்றோம். சோதிட சாஸ்திர நூல்கள் பலவுள. அவற்றுள் சூரிய சித்தாந்தம் என்கிற கிரககணித சாஸ்திரத்தில் வாரங்களின் விசேஷம் யாவும் கூறப்பட்டிருக்கின்றது. அதில் முதலாவது மத்தியமாதிகாரத்தில்

सप्तभिः क्षयितः शेषः सूर्याद्यो वासरेश्वरः

என்ற 51-வது சுலோகத்தில், சிருஷ்டி முதற்றொடங்கி இஷ்டமான குறிப்பிட்ட தினத்திற்கு வாராதிபதி தெரிய வேண்டுமானால் சிருஷ்டி முதல் இஷ்டதினம்வரை விரைவி லுள்ள ஸாவன நாட்களை ஏழால் வகுத்து மிஞ்சினது சூரியாதியாக வாராதிபதிகளாம் என்று கூறப்பட்டிருக் கின்றது. ஏழால் வகுப்பானேனென்றால் வாராதிபதிகள் ஏழுபேர்களானதால் என்று உபபத்தி கூறவேண்டும். இதைத்தான்

ग्रहाणां सप्तसंख्यत्वात्सप्ततष्टोऽहर्गणः, शेषंगतवारः

என்ற வசனத்தால் வியாக்கியானம் செய்தவர் கூறுகின் றார். சூரியாதியாகவென்று கூறுவானேனென்றால் சிருஷ் டி முதலில் சூரிய வாரம் (ஞாயிறு) மாயிருந்தபடியாலெ னக் கூறவேண்டும். இதுவும்

सृष्ट्यादौ अर्कवारसद्भावात्तदाद्या दिनमासवर्षे वरः

என்ற வியாக்கியான வசனத்தில் ஸ்பஷ்டம். இங்ஙனமே सप्तोद्धतामशेषौ तु என்ற 52-வது சுலோகத்திலும் वाराणांसप्त-संख्यत्वात् என்ற வியாக்கியான வசனத்திலும், வாரங்கள் ஏழு என்பது ஏற்படுகின்றது.

'सूर्याद्यो वासरेश्वरः'

என்றதனால் வாராதிபதிகளின் வரிசையும் அதன் மூலமாய் வாரத்தின் வரிசையும் சித்தமாய் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. ஆகையால் வாரங்கள் ஏழெனவும், அவை களுக்கு சூரியாதிகள் அதிபதிகளெனவும், அவர்கள் ஒரு வரிசையாயிருப்பவர்களெனவும், அவர்களின் வரிசையால் வாரங்களும் வரிசையுள்ளவைகளென்றும் ஏற்படுகின்றது. ஆகவே ஆரியர்களுக்கு வாரங்களின் சங்கியை அவைக ளின் அதிபதிவரிசை இவைகள் தெரியாதென்பது தெரி யாமையாலாம்.

अग्नीषोमौ भानुचन्द्रौ ततस्त्वङ्गारकादयः ।
तेजोभूखाम्बुवातेभ्यः क्रमशः पञ्च जज्ञिरे ॥

என்ற பூகோளாத்தியாயத்தின் 24-வது சுலோகத்தால் சூரிய சந்திரர்கள் அக்னி ஜலங்களை பிரதானமாகவுடைய பூதங்களினின்றும் குஜன் முதலிய ஐந்து கிரஹங்கள் வரிசையாய் தேஜஸ்ஸு, பூமி, ஆகாயம, ஜலம் காற்று இவைகளை பிரதானமாக உடைய பஞ்ச பூதாம்சங்களினின்றும் உத்பத்தி அடைந்தார்கள் எனக்கூறி இருப்பதால் கிருகங்களுக்குக் காரணம் தெரியவில்லை என்பது தவறு. கிருகங்களின் வரிசை இந்த சுலோகத்திலும் வெளிப்படுகிறது. இங்ஙனம் வாராதிபதிகளுக்கு சூரியாதியான்வரிசை ஆங்காங்கு அனுவதிக்கப்படுகின்றமையால் அது சித்தமாகவே யுளது. இது இந்த கிரந்தத்தில் மாத்திரமல்ல. மற்ற சோதிட நூல்களிலும் ஸ்மிருதி புராணாதிகளிலும் பிரவஸித்தமாயுளது. 'सूर्यादिनाथाः क्रमात्' இது முதலிய பிருகஜ்ஜாதக வசனங்களிலும் வியக்தமாயுள்ளது. அந்த வரிசையாவது சூரியன் சந்திரன், அங்காரகன், புதன், பிரகஸ்பதி, சுக்கிரன், சனி என்பதாகவாம். இவ்வளவால் ஐந்து கேழ்வைகளில் மூன்றுவது கேழ்வை தவிர மற்ற நான்கு கேழ்வைகளுக்கும் பதில் கூறப்பட்டது.

இனி வரிசை தெரிந்தாலும் அதற்குக் காரணம் தெரியாது என்ற மூன்றுவது கேழ்வைக்கு பதில் கூறுவாம்.

'मध्ये समन्ताद्ण्डस्य भूगोलो व्योम्नि तिष्ठति ।
बिभ्राणः परमां शक्तिं ब्रह्मणो धारणात्मिकाम् ॥'

(கீழ்ச் சொல்லப்பட்ட) பிரும்மாண்டத்தின் மத்தியில் பூமி ஒரு ஆதாரமின்றியும் நிற்கக்கூடிய சக்தியையடைந்து கோள (உண்டை) வடிவமாய் நிற்கின்றது. என்ற பூகோளாத்தியாயத்தின் 32-வது சுலோகத்தால் பூமி நிரா

தாரமாய் ஆகாயத்தில் பிரும்மாண்ட மத்தியில் இிற்பதாக ஏற்படுகின்றது. அதைச் சுற்றி சகல கிருஹங்களும் நக்ஷத்திரகோளமும் சஞ்சரிக்கின்றன. அதில் சந்திரன் பூமிக்கு சமீபத்தில் தனது மார்க்கத்தில் பூமியைச் சுற்றி சஞ்சரிக்கிறான். அதற்கு மேல் புதன் தன்னுடைய மார்க்கத்தில் சஞ்சரிக்கிறான். சந்திரன் சஞ்சரிக்கிற மார்க்கத்தைவிட புதன சஞ்சரிக்கிற மார்க்கம் பூமிக்கு விலகினது. அதற்கப்பால் சுக்கிர மார்க்கமும் அதற்கப்பால் சூரிய மார்க்கமும் அதற்கப்பால் குஜமார்க்கமும் அதற்கப்பால் குரு மார்க்கமும் அதற்கப்பால் சனி மார்க்கமும் அதற்கு மேல் நக்ஷத்திர கோளமும் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கருத்து

'ब्रह्माण्डमध्ये परिधिर्व्योमकक्षाभिधीयते ।
तन्मध्ये भ्रमणं भानामधोऽधः क्रमशस्तथा ॥ ३० ॥'
'मन्दामरेज्यभूपुत्रसूर्यशुक्रेन्दुजेन्दवः ।
परिभ्रमन्त्यधोधःस्थाः सिद्धविद्याधरा घनाः ॥ ३१ ॥'

இந்த சுலோகங்களில் வெளியாகிறது. பூமியிலிருந்து மேல் மேலாக சந்திரன், புதன், சுக்கிரன், சூரியன், குஜன் குரு, சனி இவர்கள் சஞ்சரிக்கின்றார்கள். 'मन्दामरेज्य' என்ற வசனத்தில் மேலேயிருந்து தொடங்கி கீழே கீழே சனி முதல் சந்திரன் வரையுள்ள கிருகங்கள் சஞ்சரிப்பதாக கூறியிருக்கின்றது. அதாவது நக்ஷத்திர கோளத்திற்கு அடுத்து, சனி. பிறகு வரிசையாய் குரு, குஜன், சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன் ஆகிய இக்கிரகங்கள் கீழே கீழே தங்கள் மார்க்கங்களில் சஞ்சரிக்கின்றார்கள். இங்கு ஓர் சங்கையுண்டு—அதாவது—கிரகங்கள் வெவ்வேறு மார்க்கங்களில் சஞ்சரிப்பதாக ஒப்புக்கொண்டால் ஒருவரோடொருவர் ஸமாகமத்தை (சேர்க்கையை) யடைய நேரிடமாட்டாதே. அப்பொழுது கிரகங்களின் யுத்த

ஸமாகமாதிகளை போதிப்பது யாங்ஙனம் என்று. இதற்கு சமாதானம்—

'भावाभावाय लोकानां कल्पनेयं प्रदर्शिता ।
स्वमार्गगाः प्रयान्त्येते दूरमन्योन्यमाश्रिताः ॥

என்ற கிரகயுத்யதிகாரத்தில் 24-வது சுலோகத்தில்—இந்த கிரகங்கள் ஒன்றற்கொன்று வெகுதூரம் விலகியிருக்கின்ற வெவ்வேறான தங்கள் தங்கள் மார்க்கங்களில் சஞ்சரிக்கின்றார்கள். ஆயினும் பூமியிலிருந்து பார்க்கின்றவர்களுக்கு ஒரு கிரகத்தின் கீழோ மேலோ மற்றோர் கிரகம் ஒரே ரேகையில் (லயனில்) வரும் பொழுது தூரத்துப் பார்வையால் ஒரே இடத்தில் சேர்ந்திருப்பதாகத் தோன்றுமாகையால் அந்தக் கற்பனையை யனுஸரித்து வாஸ்தவமாக ஸமாகமாதிகள் சம்பவியாவிடினும் உலகத்திலுள்ள பிராணிகளின் சுபாசுப பலன்களைத் தெரிவிப்பதற்காகக் கூறப்பட்டன—என்று சொல்லப்பட்டது. இவ்வாறாய்க் கீழ் மேலாக சஞ்சரிக்கின்ற சனிமுதல் சந்திர பரியந்தமுள்ள கிரகங்கள் ஹோரைகளுக்கு அதிபதிகளாம். ஹோரை யென்பது முகூர்த்தமெனப்படும். இரண்டரை நாழிகை கொண்ட காலத்தைமுகூர்த்தமென்பர். ஒரு தினத்திற்கு 24 ஹோரைகளுண்டு. அவைகளுக்கு சனி முதலியவர்கள் அதிபதிகளாம். அதாவது—ஏழு ஹோரைகளுக்கு சனிமுதல் சந்திரன்வரையுள்ளவர்கள் அதிபதிகள். எட்டாவது ஹோரைமுதல் 14-வது ஹோரைவரைக்கும் அவர்கள்தான். மறுபடி 15-வது ஹோரைமுதல் 21-வது ஹோரை வரைக்கும் அவர்களேதான் அதிபதிகள். 21 ஹோரை போக பாக்கி மூன்று ஹோரைகளுக்கு சனி, குரு, குஜன் இவர்கள் அதிபதிகள். இவ்வாறு திருப்பித் திருப்பிச் சனி, குரு, குஜன், சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன் ஆகிய இந்த ஏழு கிரகங்கள் 24 ஹோரைகளுக்கும் அதிபதிகள்.

'होरेशाः सूर्यतनयादधोऽधः क्रमतस्तथा'

'சனி முதற்கொண்டு வரிசையாய் கீழே கீழேயுள்ளவர்கள் ஹோராதிபதிகள்' என்ற பூகோளாத்தியாயம் 79-வது சுலோகத்தில் இக்கருத்து ஸ்பஷ்டமாயுள்ளது. இதற்கு உபபத்தி, கோளஸ்வரூபத்தை நிரூபிக்காமற் கூறமுடியாது பற்றி அதனை யிங்கு விடுத்தனம். வேறு ஸமயத்தில் அதனையும் வெளியிடுவோம். ஒருதினத்தின் முதலாவது ஹோரைக்கு எவன் அதிபதியோ, அவன்தான் அந்த தினத்திற்கு முழுவதும் அதிபதி. ஒருவனுடைய தினத்தில் மற்றவனுக்கு ஹோராதிபத்தியம் வருமாயெனச் சங்கை சரியன்று. ஒருவனுடைய மஹாதசையில் மற்ற கிரகங்கள் புக்திநாதர்களாவதுபோல் ஒருவனுடைய மற்ற கிரகங்கள் ஹோராதிபதிகளாகலாம். ஆகவே ஸிருஷ்டியாரம்பத்தில் ஞாயிற்றுக் கிழமையென்று முன்கூறப்பட்டபடியால் அதற்கு முன் வியவகாரத்தில் சனிக்கிழமை முடிவிலிருக்க வேண்டும். சனிக்கிழமையில் முதலாவது ஹோரைக்கு சனியதிபதியாதலால் அன்று 24 ஹோரைகளுக்குள் 21 ஹோரைகளுக்கு திருப்பித் திருப்பி சனி முதலியவர்கள் அதிபதிகளாகவும், 22-வது ஹோரைக்கு சனியும், 23-வது ஹோரைக்கு, குருவும், 24-வது ஹோரைக்கு குஜனும் அதிபதிகளாகவுமிருந்தார்கள். 25-வது ஹோரை மறுதினத்தின் முதலாவது ஹோரை. அதற்கு, குஜனுக்கு அடுத்த சூரியன் அதிபதி. ஆகையால் அந்த தினம் முழுவதும் சூரியனே யதிபதி. ஆகையால் அதை பானுவாரமென்பார்கள். அதற்கடுத்த வாரம் ஸோம வாரமாக வருவானேனென்றால் அந்த ஞாயிற்றுக் கிழமையன்று 24 ஹோரைகளுக்கு சூரியன் முதல் ஹோராதிபதிகளை கணக்கிட வேண்டும். அதில் மூன்று ஏழு இருபத்தோரு ஹோரைகள் போக 22-வது

ஹோரைக்கு மறுபடி சூரியனே அதிபதியாவார். 23-வது ஹோரைக்கு சுக்கிரனும், 24-வதுஹோரைக்கு புதனுமதிபதிகளாம். 25-வது ஹோரையாகிய மறு தினம் முதலாவது ஹோரைக்கு சந்திரன் அதிபதியாகிறார். ஆகையால் அந்த தினமுழுதும் அவரே அதிபதி. அதனால் அந்த தினத்தை ஸோமவாரமென்பது. இங்ஙனமே அந்த் திங்கள்க்கிழமை யன்று முதலாவது ஹோரைக்கு சந்திரன் அதிபதியானதால் அன்று 24 ஹோரைகளுக்கும் ஹோராதிபதிகளைச் சந்திரன் முதல் கணக்கிடவேண்டும். முன் கூறியவாறு 22-வது ஹோரைக்கு சந்திரனே யதிபதியாவார். 23-வதுக்கு, சனியும், 24-வதுக்கு குருவும் அதிபதிகளாவார்கள். 25-வது ஹோரையான மறுதினம் முதல் ஹோரைக்கு குஜன் அதிபதியாகிறார். அதனால் அந்த வாரம் குஜவார்மெனப்படுகின்றது. இங்ஙனமே ஒவ்வொரு வாரத்திலும் கணக்கிட்டால் இப்பொழுது வழக்கத்திலிருக்கின்ற வாரங்களின் வரிசை வருகின்றது. இதைத்தான்

'मन्दादयः क्रमेण स्युश्चतुर्था दिवसाधिपाः।'

சனி முதல் வரிசையாய் எண்ணினால் நான்காவதாக வருகின்ற கிரகம் அடுத்த தினத்திற்கு அதிபதியாவார். இங்ஙனமே இந்த வரிசையில் ஒரு தினாதிபதிக்கு நான்காவதாக வருகின்றவர் அதற்கடுத்த தினாதிபதியாவார். என்ற பூகோளாத்தியாயத்தின் 58-வது சுலோகத்தில் ஸ்பஷ்டமாய் சூரியாம்ச புருஷன் கூறுகின்றார். இதற்கு வியாக்கியானத்தில்

'एवमहोरात्रे चतुर्विंशतिहोराः सप्तष्टाः त्रयो होरेशा गताः। चतुर्थो होरेशो द्वितीयदिनप्रारम्भे। स एव प्रथमहोरेशत्वाद्द्वितीयदिनेशः। एवमुत्तरत्रापि।'

என்ற வாக்கியங்களால் கீழ் காட்டிய உபபத்தியை வியாக்

கியானம் செய்தவர் கூறுகின்றார். ஆகையால் ஆரியர்களுக்கு வாரங்களைப்பற்றிய சகல விசேஷங்களும் சூரிய சித்தாந்தமென்ற பிரமாணக் கிரந்த மூலமாக நன்றாய்த் தெரியும். ஆனாலிதிலும் இங்கு பிரமாணமாக எடுத்துக் காட்டின சூரிய சித்தாந்தக் கிரந்தம், தேசாந்தரத்தாரிடமிருந்து வாரங்களின் விசேஷங்களை தெரிந்துகொண்ட பிறகு எழுதப்பட்டதாக சொல்லக் கூடாதோவென்று ஓர் சந்தேகமுண்டாகலாம். அப்படி சொல்லக்கூடாது. ஏனெனில் சூரிய சித்தாந்த கிரந்தம் வைவஸ்வதமன்வந்தரத்தின் 28-வது சதுர்யுகத்தில் முதலாவது யுகசரணமான கிருத யுகத்தின் முடிவில் மயாஸுரனுக்கும் சூரிய தேவனுடைய அம்சமான மகாபுருஷன் உபதேசித்ததாக அதில் முதலாவது அதிகாரத்தில் ஸ்பஷ்டமாகின்றது.

'अल्पावशिष्टे तु कृते मयनामा महासुरः ।
रहस्यं परमं पुण्यं जिज्ञासुर्ज्ञानमुत्तमम् ॥'

கிருதயுகம் கொஞ்சம் பாக்கியிருக்கும்பொழுது இந்த கிரந்தமேற்பட்டதாக இந்த வசனம் கூறுகின்றது.

'परमायुः शतं तस्य तयाहोरात्रसंख्यया ।
आयुषोऽर्धमितं तस्य शेषकल्पोऽयमादिमः ॥ २१ ॥

कल्पादस्माच्च मनवः षड्व्यतीताः ससंधयः ।
वैवस्वतस्य च मनोर्युगानां त्रिघनो गतः ॥ २२ ॥

अष्टाविंशाद्युगादस्मायातमेतत्कृतं युगम् ।
अतः कालं प्रसंख्याय संख्यामेकत्र पिण्डयेत् ॥ २६ ॥'

என்ற வசனங்களில் பிரம்ம தேவனுடைய ஆயுஸ்ஸின் பாதி சென்றபின் இரண்டாவது பரார்த்தமான பிரம்ம தேவனுடைய பிற்பாதி ஆயுள்ஸில் முதலாவது பகலில் சுவாயம்புவமனு முதல் சாக்ஷுஷ மனுவரை ஆறுமன்னுவந்தரமான பின் ஏழாவது மன்னுவந்தரமாகிய வைவஸ்வதமன்னுவந்தரத்தில் 27-வது சதுர்யுகமான பின் 28-

வது சதுர் யுகத்தில் கிரதயுகம் இப்பொழுது முடிகிறது. இந்தக் காலங்களையும் இதற்குப் பிறகு எந்த காலத்தில் கணிக்க ஆரம்பிக்கப்படுமோ அந்தக் காலத்தையும் ஒன்றாகச் சேர்த்து, கணிக்கவேண்டுமென்று கூறியிருப்பதால் சூரியசித்தாந்தம் கிருதயுகத்தின் கடைசி பாகத்தில் இயற்றப்பட்டதாகக் கொள்ளவேண்டுமேயன்றி சமீபகாலத்தில் சிலநூற்றாண்டுகளுக்கு முந்தி இயற்றப்பட்டதாகக் கூறுவது தவறுதலேயாம்.

'षण्मनूनां तु संपीडय'

என்பதாதியான 45-வது சுலோக முதலிய வசனங்களில் இதே கருத்து வெளியாகிறது. இந்த வசனங்களை யொருவன் நம்பமாட்டேனென்றால் அவன் வார்த்தையை யார் நம்புவார்கள். ஆகையால் ஆரியர்களான நம்முன்னோர்களுடைய சித்தாந்த பரம்பரையாய் வழங்கிவருகிறபடி வாராதிகளான பஞ்சாங்கங்களை யுச்சரித்துக்கொண்டு சங்கற்பித்து தங்களுக்குரிய கர்மங்களை யனுஷ்டித்து சிரேயஸ்ஸை யாவருமடைவாராக.

V. S. வெங்கடராம சாஸ்திரி.

ஸ்நத்ஸுஜாதீயம்,

ஸகல வுலகங்களையும் படைக்குமழிவற்ற பிரமனுக்கு 'ஸநத்' என்று பெயர். ஸு, வென்றால் நன்கு செவ்வையாக, அதாவது எத்தனமன்னியில் ஜாக்கிரதையுடனென்பது பொருள். 'ஜாத' வென்றால் பிறந்தவர். ஈய, வென்பதற்கு ஸம்பந்தமென்று அர்த்தம்.

ஸகல வுலகங்களையும் படைக்குமழிவற்ற பிரமனிட மிருந்து எத்தனமன்னியில் பிறந்ததினால், ஸநத்ஸுஜாத ரென்கிற பெயரோங்கிய மாமுனிவனியற்றியது ஸநத்ஸு ஜாதீயம்.

யாருக்காக இயற்றியதென்றால் பாருலகின் பாரத்தை ப்பரிஹரிக்கப் பரமனான பகவானால் பிரவிருத்திக்கச் செய் யப்படுமே பாரதப் பெரும் போரில் பாண்டவரால் நமது மைந்தர்கள் மீளாமல் மாளவே போகின்றனரென்று பரித பிக்கும் பரதகுலத்தரசனான திருதராஷ்டிரருக்காக இயற் றியது.

ஸநத்ஸுஜாதர் அவருக்கியம்பக் காரணம் யாதெ னில் அவ்வாறு பரிதபிக்கும் பாரதனுக்கு இளையோனான விதுரன் எவ்வாறியம்பியும் இருதயத்திலேறாமைகண்டு அவரை நோக்கி "என்னண்ணலே, பூபதியே, மிருத்யு வே இல்லையென்று இயம்பினன் ஸநத்ஸுஜாதன்; அதை யறியாமல் நீரித்தன்மையாய் ஏங்குவது ஏனோ" என்று ரைத்திட்டான்.

அப்பொழுது அரசன் "அப்பா விதுர, அதெவ்வா" றென்று வினவ விதுரன் "அண்ணாலே அது அத்யாத்மத் திலடங்கிய விஷயம். அதை இயம்ப சூத்திரயோனியில் பிறந்த யான் யோக்கியனல்லேன். ஆகையால் அதை ஸநத்ஸுஜாதர் உமக்குபதேசிப்பார்" என்றுரைத்துவிட் டு மாமுனிவனை ஸ்மரித்தான். அக்கணமே மூலகுரு வான முக்கண்ணன் முக்கிய சிஷனாய்ச் சிக்கற்ற மாமுனி வன் சீலமுள்ள விதுரன் கண்முன்னிற்க, அத்தருணம் விதுரன் திடுக்கிட்டெழுந்திருந்து திருத்தாளில் தெண்டம் ஸமர்ப்பித்து திருதராஷ்டிரன் மனக்கவலை தீர மறைமுடி வின் பொருளை மொழியுமாறு மாமறையோன் முன் முறையிட்டான்.

அச்சமயமிடிந்திட்ட மனமுடைய கௌரவன் மறை யவன் மலரடி பணிந்து விநயத்துடன் வினவினன். அ தெவ்வாறெனில்:

திருதராஷ்டிரன் ஸநத்ஸுஜாதரை நோக்கி "ஓ பக வானே, ஸநத்ஸுஜாத, மிருத்தியுவென்பதே இல்லையென் று தாங்கள் மொழிந்திருப்பதாகக் கேட்கிறேன். ஆனால் தேவர்களும் அஸுரர்களும் மிருத்தியுவை நிவிருத்தித் துக்கொள்வதற்காகப் பிரம்மசர்யத்தை யனுஷ்டித்தார்க ளாமே. ஆகையால் இவ்விரண்டிலெது ஸத்தியம்?"

இவ்விதம் கேட்ட அரசனை நோக்கி ஸநத்ஸுஜாதர் மொழிகின்றார்.

என்னவெனில் "அரசனே, சிலர் மிருத்தியுவுளதென் றும் அதை மறையுரைத்த கர்மத்தால் நிவிருத்திக்க வே ண்டுமென்றும் இயம்புகின்றனர். மற்றவர்கள் மிருத் தியுவே இல்லையென்று வற்புறுத்திப் புகலுகின்றனர். அரசனே ஆதிமுதல் ஏற்பட்ட இவ்விரண்டு வியவகார மும் ஸத்தியமே. ஐயம் வேண்டாம்."

அதெங்ஙனமெனில் மிருத்தியுவில்லையென்று மொழி ந்திடும் மேலோர்களின் கருத்துயாதெனில்.

"மிருத்தியுவுளனே இலனே, மனிதன் மரிக்கும் தன் மையை அடைந்தபொழுது தான் மிருத்தியுவிருந்தாலும் மரிக்கச் செய்வான்.

அதெவ்வாறென்றால் பக்கத்திலுள்ள பள்ளத்தில் பது ங்கிக் கிடக்கும் பாம்பானது வழிநடப்போன் மருண்டு பள்ளத்தில் விழுங்கால் படமெடுத்து கடிக்கின்றது. அன் றேல் அல்லவே.

இங்ஙனமே மனிதரின் மரணமும்.

ஆகையால் பேரறிவுடைய பெரியோர்கள் மோகத்தை

யே மிருத்யுவென்று கருதினர். மோஹமென்றால் மூடத்தனம். தன்னிலே தவறி விபரீதமாய் நடப்பது. அதாவது தான் நித்யமுக்தமான பரமனாயிருக்க அந்நிலை தவறித் தன்னை ஜனனமரணங்களையுடைய ஸம்ஸாரியாய் பிரமித்து விஷயங்களில் விழுவது மோஹம். இதுவே மிருத்யுவென்பது கவிகளின் கருத்து. புதரில் விழாதவனைப் பாம்பு தீண்டாததுபோல் இங்ஙனமாகாதவனை மிருத்யுவுமணுகான்.

'प्रमादं वै मृत्युमहं ब्रवीमि'

நானோவெனில் பிரமாதத்தை மிருத்யுவாய்ச் சொல்லுகின்றேன். பிரமாதமென்றால் அஜாக்கிரதை. ஜாக்கிரதை யென்றால் விழித்திருப்பது. அஜாக்கிரதை அதற்கு விபரீதம்.

அதாவது அகண்டமாய்த் தன்னொளியினாலேயே எங்கிலும் தானாகவே பிரகாசிக்கின்ற தனதான்மாவைத் தானென்று விழித்துப் பாராமலிருப்பதே பிரமாதம்.

அந்தப் பிரமாதத்தினாலேயே கட்டையால் செய்யப்பட்டகெஜத்தைக் கட்டையென்றறியாத மெதுத் தனத்தால் கெஜமென்று மிரண்டு விழுந்து மரிப்பதுபோல் ஜனனமரணமற்ற ஆன்மாவை அவைகளையுடைய ஜீவனாகப் பிரமித்து விஷயப் புதரில்விழுந்து மரிப்பதினால் பிரமாதமே மிருத்தியுவென்பதும். அதைத் தவிர வேறுமிருத்தியு வில்லையென்பதும் என்கருத்து. மிருத்தியுவுளனாயினும் அவ்விதபிரமாதமுடையவனே அவனுக்கிரையாவதால் மிருத்யுவில்லையென்று இயம்பினேன். இந்தப் பிரமாதத்தை விலக்குவதே மிருத்யுவை நிவிருத்திப்பது. அரசனே, ஆன்மாவை அறியாமல் உலகமாகப் பார்த்து பிரமிப்பதே மிருத்யுவென்று கவிகளின் கொள்கை. அவ்வளவு தூரமேன்,

ஆன்மாவையறியாததே மிருத்யுவென்பது என்னுள்ளம், அது ஸரிதானே.

மிருத்யுவானவன்யெதிரில் தோன்றிய புலிபோல் பிடிங்கித்தின்னவா செய்கின்றான். இவனது உருவத்தை நாம் காண்கின்றோமா? சிலர் இதைக் காட்டிலும் மிருத்யு வேறென்றும் அவர் பிரம்மசர்யத்தால் தனது ஆத்மாவில் நிலை கொண்டு மரணமன்னியில் தேவராய் ஸதாசாரமுடையவர்களுக்கு க்ஷேமத்தையும் அஸத்தான ஆசாரமுடையவர்களுக்குத் துக்கத்தையும் கொடுத்துக்கொண்டு பிதிரு லோகத்தில் அரசு செலுத்துகின்றார். அவருக்கு யமனென்று பெயர். இவருடைய ஆஞ்ஞையினால் மனிதர்களுக்குக் குரோதம் பிரமாதம் லோபம் இம்மூன்றுருவமான மிருத்யுவானது வெளிக் கிளம்புகின்றது. அதனால் மனிதன் அகங்காரம் கொண்டவனாய்ச் சாஸ்திர விருத்தமான மார்க்கங்களில் ஸஞ்சரிக்கின்றான். ஒருவனும் ஆத்மாவினிடம் பற்றுதலையடைகிறானில்லை. அவ்விதமான அவர்கள் மோகத்தை யடைந்து அந்த யமன் வசமாகி இங்கிருந்து அந்தவுலகம் சென்று மறுபடியும் விழுகின்றனர். பிறகு அவர்களை இந்திரியங்கள் தொடர்ந்து சேஷ்டிக்கின்றன. அதினால் மரணமும் மரித்து மறுபடி ஜனனமுமவர்களுக்கு உண்டாகின்றது.

‘अभिध्या वै प्रथमं हन्ति लोकान्’

அபித்யையையே முதலில் உலகங்களை அடிக்கின்றது. அபித்யையென்றால் விஷயங்களை நன்கு சிந்திப்பது. அது முன்னர் உலகங்களை யடிக்கின்றது.

‘कामक्रोधावनुगृह्याशु पश्चात्’ ‘एते बालान्मृत्यवे प्रापयन्ति’

பின்னர் காமக்ரோதங்கள் அடுத்துப் பிடித்தடிக்கின்றன. இவைகள் புத்தி சக்தியற்றவர்களை மிருத்யுவினிடம் சேர்க்கின்றன.

'धीरास्तु धैर्येण तरन्ति मृत्युम्'

தீரர்களோவெனில் மனோதைரியத்தால் மிருத்யுவை மீறுகின்றனர். ஆகையால் விஷயத்தைச் சிந்தித்துக் காமத்தாலடியுண்டு குரோதத்தாலுலகமலரி மடிகின்றது.

அங்ஙனமாகாரிங்கனமாகார்.

ஆகையால் பிரமாதமே மிருத்யுவுக்கு மூலகாரணமானதால் அஃதே மிருத்யுவென்றுரைக்கலாமோம்.

திருதராஷ்டிரன் "குமாரா, அதேன் வந்தது. எங்ஙனம் வந்தது" என்று வினவ மறையோனுரைக்கின்றான்.

'तमोप्रकाशो भूतानां नरकोऽयं प्रदृश्यते'

"அரசனே, ஒளியற்ற அகத்திருளாம். பிராணிகளனுபவிக்கும் நரகமானது இதோ காணப்படுகின்றதே.

'मुह्यन्त इव यावन्ति गच्छन्तः श्वभ्रमुन्मुखाः'

அதனால் நடக்கின்றவர்கள் இருளால் வழிமிரண்டு புதருக்கெதிராயோடி விழுவதுபோல் பிராணிகள் அகத்திருளால் ஆன்மாவையடையும் வழிமிரண்டு விஷயங்களில் தாவி இறப்புப் பிறப்பாகும் புதரில் விழுகின்றனர்.

பாரத, அகத்திருள் ஏன் வந்ததென்றால் வெளியிருள் ஏன் வந்தது. அது வெளி ஒளி மறைந்து வந்ததென்றால் இது உள்ளொளி மறைந்து வந்தது.

அது மறைபடுவானேனென்றால் இது மறைபடுவானேன். இது இவ்விதமமைந்த அமைப்பென்றால் அதுவும் அவ்விதமமைந்த அமைப்பு என்று கொள்ளும். அது எவ்வண்ணம் வந்ததென்றால் நீரெவ்வண்ணமிங்கு தயங்குகின்றீரோ இவ்வண்ணம் வந்தவாறே."

ஆகையால் இவ்விதம் மிருத்யு வுண்டாவதென்பதையறிந்து

'ज्ञाने तिष्ठन्न बिभेतीह मृत्योः'

ஞானத்திலிருந்தால் மிருத்யுவுக்கு பயப்படவேண்டாம். ஞானமென்பது அறிவு. அது தன்னொளி. அதனால் அகத்திருளையகற்றி இகத்திலேயே மஹாத்துக்கள் மிருத்தியுவை மாற்றினர். கர்மத்தால் மிருத்யுவை விலக்கலாமென்று முறையிடும் மறையோர்களின் கருத்தென்னவெனில், பழவுரைவுரைத்திட்ட பற்பல வினைகளைக் கருத்துடனனுஷ்டித்துக் கர்த்தனுக்களித்திட்டாற்றிடமுறவறிவுண்டாகித் தீங்குகள் நீங்குமென்றே, இங்ஙனமறிவினால் ஆத்மாவையடைந்தால் அப்ரமாதமெனும் மிருத்யு விலகிவிடும். அங்ஙனமறியாதவனே பாபி. அதெங்ஙனமெனில்

'योऽन्यथा सन्तमात्मानमन्यथा प्रतिपद्यते ।
किं तेन न कृतं पापं चोरेणात्मापहारिणा ॥'

வென்று மறை முறையிடுகின்றது. அதாவது வேறுவிதமாயிருக்கின்ற ஆத்மாவை வேறு விதமாக எவன் நினைக்கிறானோ ஆத்மாவை திருடினவனான அந்தத் திருடன செய்யாத பாபமெது. இதைக்காட்டிலும் வேறு கொடுமையான பாபமில்லை. எல்லாப் பாபமுமிதிலடங்கியனவே. ஆத்மாவை யறியாதவனே மகாபாபி. அவனனுபவிக்கும் ஸம்ஸாரத்தைக் காட்டிலும் கொடுமையான நரகமேது. யமலோகத்திலுள்ள நரகமும் இவன் அனுபவிக்கும் ஸம்ஸாரத்தில் ஒரு லேசமேயென்று மறையினகம். ஆகையால் அப்ரமாதத்தை ஸம்பாதிக்கவேண்டும்.

அப்ரமாதத்திற்குத் தெமமும் தியாகமும் ஸஹாயங்கள். தெமமென்றால் அடக்கம். அதாவது வெளிப்புலன்கள் இஷ்டப்படித் தன் தன் விஷயங்களில் தாவாமல் அடங்கி நியாயமாகப் பிரவிருத்தித்தல். அவ்வித புலன்களையுடைய புருஷன் தெமமுடையவன். அவினைத் தாந்த

னென்பார்கள். அடங்கினவனென்று பொருள். அது கொண்டே உலகத்தோர் 'दान्तोऽयं वृषा' இது அடங்கின விருஷபமென்று வியவகரிக்கின்றனர்.

'दमोऽष्टादशदोषः स्यात्' தெமத்திற்குப் பதினெட்டுவித தோஷங்களுண்டு. அவைகளை விலக்கித் தெமத்தைக் கிரகிக்க வேண்டும்.

அவை யாவவையெனில் 1. 'प्रातिकूल्यम्' வெகு ஜனங்களுக்கு விபரீதமாய் நடப்பது. 2. 'अनृतं च' பொய்யையுரைப்பது. 3. 'अभ्यसूया च' அஸூயைப்படுவது. 4, 5. 'कामार्थौ' 4. காமம் ஸ்திரீயினிடம் அதியாசை. 5. அர்த்தம். தனத்தில் விசேஷப் பழக்கம். 6. 'तथा स्पृहा' ஆவல் 7. 'क्रोधः' கோபம். 8. 'शोकः' மனஸ்தாபம். 9. 'तथा तृष्णा' தன ஆசை. 10. 'लोभः' தனமிருந்தும் கொடுக்க மனமில்லாமை. 11. 'पैशुन्यमेव च' கோட் சொல்லுதல். 12. 'मत्सरश्च' மாத்ஸர்யம். 13. 'हिंसा च' பிராணிகளை விசேஷமாய்ப் பிடித்தல். 14. 'परितापः' அதிக தாபம். 15. 'अरतिः' கார்யங்களில் உத்ஸாகமில்லாமை. 16. 'अपस्मारश्च' மறதி. 17. 'अतिवादः' அதிகப் பேச்சு. 18. 'तथा संभावनात्मनि' தன்னிடம் தானே கௌரவத்தைப் பாராட்டுதல். இந்த பதினெட்டு தோஷங்களுமற்றவன் ஸத்துக்களால் தாந்தனென்று சொல்லப்படுகின்றான். தியாகமானது ஆறுவிதமாகக் கருதப்பட்டிருக்கிறது. இவ்வாறுவிதத்தியாகமும் சிரேயஸ்கரங்களே. அவையாவனவென்றால் 1. 'श्रियं प्राप्य न हृष्यति' ஸ்ரீயையடைந்தபொழுது மகிழ்ச்சியடையாமலிருத்தல். 2. 'इष्टापूर्ते द्वितीयः स्यात्' இஷ்டமும் பூர்த்தமும் இரண்டாவது தியாகம். இஷ்டமென்றால்-யாகம், பூர்த்தமென்றால்-பொது ஜனங்களுக்கு உபயோகமாகும்படி கிணறு குளம் வெட்டுதல், ரோட்டு முதலியதை உண்டுபண்ணுதல், ஈச்வராராதனத்

திற்குரிய நந்தவனம் ஆலயம் முதலியதை நிர்மாணம் செய்வது முதலியன. 3. 'नित्यवैराग्ययोगतः' 'कामत्यागश्च' என்பதும் வைராக்கியத்துடன்கூடி காமத்தை விடுதல், அதாவது விஷய போகங்களை வெறுத்தல். (இது இந்த ஆறுவிதத்தியாகங்களிலும் சிறந்தது. இது எளிதில் கை கூடுவதில்லை.)

(இன்னும் வரும்.)

க. ச. கிருஷ்ணசாமி சாஸ்திரி.

ஆன்ஹிகச்சுருக்கம்.

(முன்தொடர்ச்சி.)

மண் முதலிய ஸ்னானத் திரவியம் கொண்டுவருதல்.

இக்காரியம் பகலை எட்டாகப் பங்கிட்டு அதில் நான்காவது பாகத்தில் அதாவது சூரியோதயாதி பதினொன்றேகால் 11¼-நாழிகைக்குமேல் பதினைந்து 15-நாழிகைக்குள்பட்ட காலத்தில் செய்ய வேண்டியது. எட்டாகப் பங்கிட்ட பகலின் முதலாவது பாகத்தில் செய்யவேண்டிய காரியங்களின் பிரகரணத்தில் கூறுவது, ஸ்னானத்தை நிரூபித்தபின் அதற்கு வேண்டிய திரவியங்களைச் சொல்லவேண்டியதாக நேர்ந்ததாலாமென்க. எட்டாகப் பங்கிட்ட பகலின் நான்காவது பாகத்தில் ஸ்னானத்திற்காக வேண்டிய மண்ணைக் கொண்டு வரவேண்டும். எள்ளு, புஷ்பம், குசம், கோமயம் (பசுவின் சாணம்) தர்ப்பம், அருகம்புல், நாயுருவி இவைகளையும் கொண்டுவரவேண்டும். அந்த மண் சுத்தமான தேசத்தினின்று கல்லு, மணியாம்பொருக்கு இவை

களில்லாமல் கொண்டுவரவேண்டும். சிவப்பு, மஞ்சள் நிற முள்ளது, வெளுப்பு ஆகிய மூன்று விதமாகிய மண்ணெடுக்கலாம். புத்து, எலிவளை, குப்பை குவித்தவிடம், ஜலம், விழி நடை, மரத்தடி இவ்விடங்களிலிருந்து மண்ணெடுக்கக் கூடாது. ஒருவன சௌசம் செய்து மிஞ்சிய மண்ணும் கூடாது. மண், கோமயம் இவைகளை இரவில் எடுக்கக் கூடாது. கோமூத்திரத்தை பிரதோஷ காலத்திற் கிரஹிக்கக்கூடாது. மண் போட்டுக்கொண்டு விடியற் காலத்திற் செய்யும் ஸ்னானத்தை செய்யக் கூடாது. ஆனால் மத்தியான்ன காலத்தில் செய்யும் ஸ்னானத்தைத் தான் செய்யலாம். அந்தக் காலம் முதிர்ந்து விட்டாலும் மிருத்திகா ஸ்னானம கூடாது. செவ்வாய்க் கிழமை ஞாயிற்றுக் கிழமைகளிலும் கூடாது. மண்ணெடுக்கக் கூடிய சுத்தமான தேசஞ்சென்று, பூமியை காயத்ரீ மந்திரத்தால் ஸதுதித்து மண் வெட்டியால் அங்கு வெட்டி மேல் பாகத்தில் நானகு அங்குல மண்ணைத தள்ளிவிட்டு அதற்குக் கீழுள்ள மணணை வெட்டி காயததரீ மந்திரததை யுச்சரித்துக்கொண்டு எடுத்து சுத்தமானவிடத்தில் வைத்துக் கொண்டு காயத்ரீயால புரோக்ஷித்து கிரஹததில கொணடு வந்து வைத்து வைக்கவேண்டும.

36. மத்தியான்ன ஸ்னான முறை

ஆன்ஹிகச்சுருக்கத்தின் 32-வது "ஸ்னானத்தின் பிரிவு" என்ற விஷயததில நித்திய ஸனானப் பிரஸங்கத்தால் மாததியான்ஹிக ஸ்னானத்தை யிங்கேயே நிரூபிப்பதாக கூறப்பட்டது. ஆனால் ஆங்கே அதன் முறையை விரிவாகக் கூறாமல், அந்த விஷயத்திற்கு உபயோகமாயுள்ள—"ஸ்னானத்திற்குரிய தீர்த்தம்" "அதற்குதவாததீர்த்தம்" "அதற்குரிய திரவியம் ஸங்கிரகித்தல்" ஆகிய விஷயங்கள் இடையே நிரூபிக்கப்பட்டன. இனி அந்த மாத்தியான்

ஹிக ஸ்னன முறையைக் கூறுவாம். மாத்தியான்ஹிக ஸ்னனம் செய்யப் போகிறவன், ஏற்கனவே கிரஹத்தில் கொண்டு வைக்கப்பட்ட மண், கோமயம், அருகம் புல், நாயுருவி இவைகளை யெடுத்துக்கொண்டு ஞாயிறு, செவ்வாய்க் கிழமை தவிர மற்ற நாட்களில் பன்னிரண்டு நாழிகைக்கு மேல் தீர்த்தக் கரை சென்று அங்கு சுத்தமான விடத்தில் புரோக்ஷித்து இவைகளை வைக்கவேண்டும். கழுத்துக்கு மேல் பாகத்திலும், கழுத்துக்குக் கீழ் இடுப்புக்கு மேல் வரையிலும், இடுப்புக்குக் கீழ் முழங்கால் வரையிலும், முழங்காலுக்குக் கீழ் பாகத்திலும் ஆக நான்குவிடங்களில் போட்டுக் கொள்வதற்காக நான்கு பாகமாக மிருத்திகையையும், கோமயத்தையும் பங்கிட்டுவைக்கவேண்டும். ஓரிடத்தில் போட்டுக் கொண்டதை மற்றோரிடத்தில் போட்டுக் கொள்ளக்கூடாது. ஆகையால் நான்காக பங்கிட்டு வைக்கவேண்டும். அவற்றுள் முதலாவது பாகத்தை ஒரு உண்டையாகவும், இரண்டாவது பாகத்தை இரண்டுண்டைகளாகவும், மூன்றாவது பாகத்தை நான்கு உண்டைகளாகவும், நான்காவது பாகத்தை ஆறு உண்டைகளாகவும் பிரித்து வைக்கவேண்டும். உண்டைகள் பச்சை நெல்லிக்காயளவுள்ளவைகளாக இருக்கவேண்டும். பிறகு தீர்த்தத்திலிருந்து ஜலமெடுத்து தீர்த்தத்திற்குவெளிபுறமாகக் கரையில் கால் கைகளை நன்றாய் அலம்பிக்கொள்ளவேண்டும். தீர்த்தம், தேவாலயம் (கோவில்), படுக்கை பிராம்மணர்களின் கிரஹம் இவ்விடங்களில் கால்களை அலம்பிவிட்டுத்தான் பிரவேசிக்கவேண்டும். கால்களை யலம்பாமல் பிரவேசிக்கக் கூடாது. ஆகையால் கால்களை யலம்பிவிட்டு ஆசமனம் செய்து, மிருத்திகை முதலிய திரவியங்களால் மாத்தியான்ஹிக ஸ்னனம் செய்வதாக சங்கற்பித்து காயத்ரீயைச் சொல்லிக்கொண்டு மண்ணுண்டையை எடுத்து அந்த காயத்ரீயாலேயே புரோக்ஷித்து

இடதுகையில் வைத்துக்கொண்டு 'अतो देवा:' 'उद्धृतासि वराहेण' என்ற மந்திரங்களால் மந்திரித்து "यत इन्द्र" "स्वस्तिदा" "विरक्षो विमृध:" "इदं सुमे जनित:" என்று தொடங்கிய நான்கு மந்திரங்களை யுச்சரித்துக்கொண்டு வரிசையாக கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய நான்கு திசைகளிலும் கொஞ்சம் கொஞ்சம் மண்ணையெறிந்து 'अश्वक्रान्ते' என்கிற மந்திரத்தால் இருகைகளிலும் ஒவ்வொரு பாகங்களாக எடுத்து அந்தந்த அங்கங்களில் பூசிக்கொள்ள வேண்டும். அதாவது முதலாவது பாகமான ஒரு உண்டையை சிரஸிலும், இரண்டாவது பாகமான இரண்டு உண்டைகளை இடுப்புக்கு மேல் பாகத்திலும், மூன்றாவது பாகமான நான்கு உண்டைகளை இடுப்புக்கு கீழ் பாகத்திலும், நான்காவது பாகமான ஆறு உண்டைகளை முழங்காலுக்குக் கீழ் கால்களிலுமாக ஒவ்வொரு உண்டையைத் தேய்த்து உடனே அலம்பி அலம்பிவிட வேண்டும். 'मृतिकेहन' என்ற மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு மண்ணைப் பூசிக்கொள்ள வேண்டும். பூசிக்கொண்ட பிறகு 'सहस्रपरमा' என்ற மந்திரத்தால் அருகம் புல்லை சிரஸில் வைத்துக்கொண்டு அதனால் துடைத்து, எறிந்து அலம்ப வேண்டும். 'काण्डात्काण्डात्' என்ற மந்திரத்தால் மற்ற அங்கங்களில் அருகம் புல்லால் துடைத்து அலம்ப வேண்டும். பிறகும் 'अपपापम्' என்ற மந்தரத்தால் நாயுருவியால் ஸ்பரிசித்துத் துடைக்க வேண்டும். இங்ஙனமே கோமயத்தாலும் சுத்தி செய்து கொள்ளவேண்டும். 'गन्धद्वारां' என்ற மந்திரத்தால் கோமயத்தைப் பூசிக்கொண்டு அருகம் புல்லாலும் நாயுருவியாலும் ஸ்பரிசித்துத் துடைத்து அலம்ப வேண்டும். இங்ஙனம் மிருத்திகையாலும் கோமயத்தாலும் சுத்தி செய்து கரையிலேயே அலம்பிவிட்டு தீர்த்தத்திலிறங்க வேண்டும். இறங்கி தீர்த்தத்தையும், வருணனையும், பிரார்த்தித்து, நமஸ்கரித்

து ஸ்னானம் செய்யும் தீர்த்தத்தில் தனக்கு முன் பாகத்தில் நான்கு முழம் சமசதுரமாக ஜலத்தில் ரேகைபோட்டு அதில் கங்கை முதலிய பத்து தீர்த்தங்களை ஆவாஹனம் செய்து ஜலத்திலுள்ள அசுத்தங்களை விலக்கி, ரேகை போட்டவிடத்தில் வலதுகையால் ஜலத்தைச், சுற்றிவரும்படி சுழற்றி ஸ்னானம் செய்யவேண்டும். தீர்த்தத்தில் இறங்குவது முதற் கூறப்பட்ட ஒவ்வொரு காரியத்திற்கும் மந்திரங்களுண்டு. அவைகளை ஆன்றோரிடமிருந்தறிந்து கொள்ளவேண்டும். தீர்த்தத்தை சிரஸில் புரோக்ஷித்துக் கொள்ள வேண்டும். இதற்கு அநேக மந்திரங்கள் உள்ளன. தீர்த்தத்தில் மூழ்கிக்கொண்டே ஜபிக்கவேண்டிய மந்திரங்களுமனேகமுண்டு. அவைகள் யாவையும் சிஷ்டர்களிடமிருந்து தெரிந்து கொள்ளவேண்டும். இங்ஙனம் விதியைத் தெரிந்துகொண்டு அதன்படி மாத்தியான்ஹிக ஸ்னானம் செய்தால் மிகுந்த புண்ணியமுண்டாகும். அனேக பாபங்கள் தொலையும், பரிசுத்தனுவான். இந்த மாத்தியான்ஹிக ஸ்னானமுறையை போதாயனர் விரிவாகக் கூறியுள்ளார். அதைத் தெரிந்து அனுஷ்டிப்பவர்களுக்கு புண்ணிய விசேஷமுண்டென்பதற்கையமில்லை. போதாயனர் கூறியவாறு விஸ்தாரமாக ஸ்னானம் செய்ய சக்தியற்றவர்கள், யாக்ஞயவல்கியர் கூறிய ஸங்கிரஹபக்ஷத்தை யாசிரயித்து ஸ்னானம் செய்யலாம். எங்ஙனமாயாவது மாத்தியான்ஹிக ஸ்னானம் அவசியம் செய்யவேண்டும். கண்வலி, காதுவலி, அதிஸார ரோகம், வயறுப்புஸம், பீநஸரோகம், அஜீர்ணம் ஆகிய ரோகமுள்ளவர்கள் ஸ்னானம் செய்வது நன்றன்று. சாப்பிட்டவுடனே ஸ்னானம் செய்வதும் சரியன்று. ஒரு ரோகமுமின்றி ஒரு அசௌகரியமுமில்லாமலிருக்கும் பொழுது சோம்பேறித்தனத்தால் விதிப்படி ஸ்னானம் செய்யாதவன் மஹா பாபியாவான்.

அவன் செய்யும் காரியமெல்லாம் வீணாய்விடும். ஆகையால் விதிப்படி ஸ்நானம் செய்ய வேண்டும். ஸ்நானம் செய்து ஸ்நாநாங்கமான தேவ ரிஷி பிதிரு தர்ப்பணம் செய்து கரையேறி முன் கூறியபடி வஸ்திரந்தரித்து மேல் காரியங்களை செய்யவேண்டும். ஒருவன் முந்தி ஸ்நானம் செய்யும் பொழுது அவன் பின் புறமாக நின்றுகொண்டு ஸ்நானம் செய்யக் கூடாது. ஸ்நானம் செய்த பின் பற்றுலக்கக் கூடாது. ஸ்நானம் செய்யும்பொழுது ஈரவஸ்திரத்தால் முகத்தைத்துடைக்கக் கூடாது. ஜலத்திற்குள் வஸ்திரமில்லாமல் நிற்கக் கூடாது. நின்றால் தேவர்களும் பிதிருக்களும் கோபங்கொண்டு விலகி விடுவார்கள். தாய் தந்தை யுள்ளவர்கள் அமாவாஸ்யா தினத்தில் மாத்தியான்ஹிக ஸ்நானம் செய்யக் கூடாது. செய்தால் பிதிருக்களின் பெருமையை குறைப்பதாகும். இதுபோன்ற அனேக நியமங்களை நன்றாகத் தெரிந்துகொண்டு ஸ்நானம் செய்தாற்றான் பயனுண்டு. விதிப்படி செய்யாத ஸ்நானம் குரங்கு செய்த ஸ்நானத்திற்கொப்பாகும். விதிப்படி ஸ்நானம் செய்து, எள்ளு தர்ப்பங்களோடும் அக்ஷதங்களோடும் தேவரிஷி பிதிரு தர்ப்பணம் செய்தால் அந்த தீர்த்தம் அமிருதத்திற்கொப்பாகி அவர்களிடம் சேரும்.

37. நைமித்திக ஸ்நானம்.

ஸ்பரிசிக்கக் கூடாதது முதலியவைகளை ஸ்பரிசித்த நிமித்தமாகச் செய்யவேண்டிய ஸ்நானம் நைமித்திக ஸ்நானமெனப்படும். அதாவது—எச்சில் முதலியவை பட்டாலும், தொடக் கூடாதவைகளை தொட்டுவிட்டாலும் ஸ்நானம் செய்யவேண்டியது. சூரியக்கிரஹணம், சந்திரகிரஹணம், ஸங்காராந்தி முதலிய காலங்களிலும் ஸ்நானம் செய்யவேண்டியது. இது நைமித்திக ஸ்நானமெனப்ப

டும். சண்டாளன் முதலியவர்களைத் தொட்டால் ஜலத்தில் மூழ்கி ஸ்னானம் செய்ய வேண்டியது. காம்யஸ்னானமும், எண்ணெய் தேய்த்துக்கொண்டு செய்யும் ஸ்னானமும், கிரியா ஸ்னானமும் அப்படியேதான் செய்யவேண்டும். மற்ற ஸ்னானங்களை உசிதம்போல் தேசகாலங்களுக்குத் தக்கபடி எப்படி வேண்டுமோ அப்படிச் செய்யலாம். சண்டாளன், பஹிஷ்டையான ஸ்திரீ, பிரஸவித்த ஸ்திரீ, பதிதன், பிணம், பிணத்தைத் தொட்டவன் இவர்களும் இவர்களைத் தொட்டவர்களும், தொட்டவர்களைத் தொட்டவர்களும், அவர்களைத் தொட்டவர்களும் ஸசேல ஸ்னானம் செய்ய வேண்டியது. இதனால் சண்டாளன் முதலியவர்களைத் தொட்டவன் முதல், அவனைத் தொட்ட இரண்டாவது பேர்வழி, அவனைத் தொட்ட மூன்றாவது பேர்வழி வரை ஸசேல ஸ்னானம் செய்யவேண்டியது. அந்த மூன்றாவது பேர்வழியைத் தொட்ட நான்காவது பேர்வழி முதல் ஸசேல ஸ்னானம் செய்யவேண்டாம். கைகால்களை யலம்பி ஆசமனம் செய்தால் போதும். சிலவிடத்து இரண்டாவது பேர்வழி வரை ஸசேல ஸ்னானமும் மூன்றாவது பேர்வழிக்கே ஆசமனமும் விதித்திருப்பது புத்தி பூர்வகமாயில்லாத விஷயம். புத்தி பூர்வகமானால் மூன்றாவது பேர்வழி ஸசேல ஸ்னானம் செய்ய வேண்டியதுதான். வேறு சிலவிடத்து இரண்டாவது பேர்வழிக்கே ஆசமனம் விதித்திருப்பது சக்தியற்றவன் விஷயமாம். சக்தியுள்ளவனாகில் அப்படிச் செய்வது சரியல்ல. முன்கூறியபடியே செய்ய வேண்டும். அல்லது கழிகளால் தொட்டவன் விஷயம் இவ்வளவால்—தெரிந்து கொண்டே தொட்டுவிட்ட மூன்றாவது பேர்வழி சக்தியுள்ளவனாகில் ஸசேல ஸ்னானம் செய்யவேண்டியது தான். தெரியாதவனாகிலும், சக்தியற்றவனாகிலும் கை

கால்களை யலம்பி ஆசமனம் செய்து மனதால் காயத்திரீ யையும், ஜலத்தை தேவதையாக உடைய மந்திரங்களையும் ஜபிக்கவேண்டும். கழி முதலியவற்றால் தொட்டால் இரண்டாவது பேர்வழி ஆசமனம் செய்ய வேண்டியது என்று ஏற்பட்டது. சண்டாளன் முதலியவர்களைத் தவிர பிணப்புகை முதலிய அசுத்த பதார்த்தங்களைப் பரிசித்துவிட்டால் ஸ்பரிசித்தவனுக்குத்தான் ஸ்நானம். அவனைத் தொட்டவனுக்கு ஆசமனம்தான். துஸ்வப்பனம் கண்டாலும், வாந்தி செய்தாலும், க்ஷௌரம்செய்து கொண்டாலும், மாதருடன் புணர்ந்தாலும், பிணப்புகை பட்டாலும், ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டியது. மாதருடன் புணர்ந்தால் ஸ்நானம் விதித்திருப்பது ருதுகாலத்தில் ஏற்பட்ட விஷயம். ருதுகாலந்தவிர மற்ற காலங்களினால் மல ஜலவிஸர்ஜனத்திற்கேற்பட்ட சௌசம் போற்றும். ருதுகாலந்தவிர மற்ற காலங்களிலும்—அஷ்டமி, சதுர்த்தசி, பர்வகாலம் பகல் முதலிய இக்காலங்களிலானால் ஸசேல ஸ்நானம் செய்யவேண்டியதுதான். மயானத்திலுள்ள மரம், ஸோமமென்ற கொடியை விற்றவன், இவர்களை ஸ்பரிசித்தால் ஸசேல ஸ்நானம் செய்யவேண்டும். சண்டாளனைத்தொட்டால் ஸசேலஸ்நானமும், சண்டாளனோடு பேசினால் பிராம்மணருடன் பேசுவதும், சண்டாளனைப் பார்த்தால் சூரியன் முதலிய தேஜஸ்களைப் பார்ப்பதும் பிராயாச்சித்தமாகும். சண்டாளனுக்கு நான்கு நுகத்தடி அளவும், பிரஸவித்த ஸ்திரீக்கு மூன்று நுகத்தடி அளவும் பஹிஷ்டா ஸதிரீக்கு இரண்டு நுகத்தடி அளவும் பதிதனுக்கு ஒரு நுகத்தடி அளவும் விலக வேண்டும். இதற்குள் சமீபத்தில் நெருங்கிவிட்டால் ஸசேல ஸ்நானம் செய்யவேண்டும். ஒன்பது காலடி அளவுள்ளது ரதங்களின் நுகத்தடி யென்றும் எட்டு அடி அளவுள்ளது வண்டி

நுகத்தடி யென்றும் பிரஸித்தமாயுள்ளது. புத்தி பூர்வமாக சண்டாளன், பதிதன் முதலியவர்களைத் தொட்டுவிட்டால் ஸசேல ஸ்னானம் செய்வதோடு அக்கினி ஜ்வாலையை ஸ்பரிசித்து நெய்யை சாப்பிடவேண்டும். சூத்திரனை ஸ்பரிசித்தால் ஒரு முழுக்கும், பள்ளனை ஸ்பரிசித்தால் பத்து முழுக்கும், சண்டாளனை ஸ்பரிசித்தால் இருபத்திரண்டு முழுக்கும், பதிதனை ஸ்பரிசித்துவிட்டால் முப்பது முழுக்கும், பஹிஷ்டையை ஸ்பரிசித்தால் முப்பத்திரண்டு முழுக்கும் முழுகவேண்டியது. சிலவிடத்தில் சண்டாளனுக்கு அறுபத்து நான்கு அடி விலக வேண்டுமென கூறப்பட்டது. சிலவிடத்து முப்பத்திரண்டு அடி விலகவேண்டுமெனக் கூறப்பட்டிருக்கிறது. இது அவரவர்களின் மனதைப் பொருத்தது. சண்டாளர்களின் குடிசைகளுக்கு இருநூறு அடி விலகவேண்டும். சிலவிடத்து பிரஸவித்த ஸ்திரீக்கு ஒரு நுகத்தடி அளவும் பதிதனுக்கு இரண்டு நுகத்தடி அளவும் பிஹிஷ்டைக்கு மூன்று நுகத்தடி அளவும் விலகவேண்டுமென கூறி இருப்பது முன்கூறப்பட்டதிற்கு விரோதிக்கின்றமையால் விகல்பமாக அனுஷ்டிக்க வேண்டும். சண்டாளன் முதலியவர்களுக்கு குறிக்கப்பட்டபடி விலகுவதற்கு இடம் கிடைக்காமல் சங்கடம் நேரிடுமிடத்திலும் கடை வீதிகளிலும் பட்டணங்களிலும் வழியிலும் சம்பவித்தவபையில் வைத்துக் கொள்ளலாம். மறைவாக சுவர் இருந்தாலும் அவ்வளவு அதிகம் விலகவேண்டியதில்லை. வஸ்திரத்தால் மறைக்கப்பட்டவிடத்தைத் தொட்டாலும் நேரிடத் தொட்டதுபோலவேயாம். சண்டாளர்களின் நிழலை பிராமணன் மிதிக்கக் கூடாது. மிதித்துவிட்டால் ஸசேல ஸ்னானஞ்செய்து நெய் சாப்பிடவேண்டும். சண்டாளனுடைய நிழல் நாற்பது அடிக்கு மேல் பட்டுவிட்டால் தோஷமில்லை. ஒரே கிளையிலும்

ஒரே விரிப்புப்பாயிலும் ஸ்பரிஸம் நேரிடாமல் பிராமணனும் சண்டாளனும் ஏறிவிட்டால் ஸ்பரிசம் நேரிடவில்லையே யென நினைப்பது மூடத்தனமாம். ஸ்பரிசம் நேரிடாவிடினும் ஸசேல ஸ்னானம் செய்யவேண்டியதுதான். அன்றியும் பௌத்தன், பாசுபதன், (லிங்கங்கட்டி) ஜைனன், நாஸ்திகன், (சார்வாகன்) காபாலிகன், தன் தொழிலுக்கு விபரீதமான தொழிலுடைய பிராமணன், சூத்திரன், விருதம் கெட்டவன், தேவலகன், (சம்பளம் வாங்கிக்கொண்டு இடைவிடாமல் மூன்று வருஷம் தேவ பூசைசெய்பவன்) இவர்களை ஸ்பரிசித்தால் ஸசேல ஸ்னானம் செய்யவேண்டும். நாய், துஷ்டன், சூரியோதயகாலத்தில் தூங்கினவன், பன்றி, கழுதை, ஒட்டகம், செந்நாய், குள்ளநரி, குரங்கு, காக்கை, கோழி, கழுகு, குருவி, ஊர்பன்றி, கோட்டான், பல்லி, ஓணான், அரணை, மனிதனுடைய எலும்பு, மாம்ஸம் இவைகளைத்தொட்டால் ஸசேல ஸ்னானம் செய்யவேண்டும். இதில் காபாலிகனை ஸ்பரிசித்தால் பிராணாயாமம்கூட செய்யவேண்டும். நாய் தொட்டுவிட்டால் ஒரு விசேஷமுண்டு. அதாவது இடுப்புக்கு மேல் கைகள் தவிர மற்ற அங்கங்களில் நாய் ஸ்பரிசித்தால் ஸசேல ஸ்னானம் செய்யவேண்டும்.

இன்னும்வரும்.)

V. S. வெங்கடராம சாஸ்திரி.